என்னில்
பரிசுத்த ஆவியானவர்

நான் கிறிஸ்துவில் விசுவாசியானபோது,
வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால்
அவருக்குள் முத்திரைபோடப்பட்டேன்.[1]

பரிசுத்த ஆவியானவர் எனக்குள் தங்கியிருக்கிறார்,[2]
என்னோடு என்றென்றைக்கும் இருப்பர்.[3]

தேவனிடத்தில் நான் பெற்ற சுதந்திரத்தின்
அச்சாரமாக அவர் இருக்கிறார்.[4]

பரிசுத்த ஆவியானவர் எனக்கு சாட்சியாய் இருக்க
வல்லமை அளிக்கிறார்.[5]

அவர் மூலமாய் நான் தேவனுடைய வார்த்தையை
தைரியமாய் பேசுகிறேன்.[6]

பரிசுத்த ஆவியானவர் என்னை சகல
சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார்.[7]

பரிசுத்த ஆவியானவர் என்னுடைய பெலவீனங்களில்
எனக்கு உதவி செய்து, நான் தேவனுடைய
சித்தத்தின்படி ஜெபிக்க உதவுகிறார்.[8]

அவர் மூலமாய் நான் எல்லா நேரங்களிலும்,
சகல வித விண்ணப்பத்தோடும் வேண்டுதலோடும்
ஜெபிப்பேன்.[9]

பரிசுத்த ஆவியானவர் இயேசுவை எனக்குள்
மகிமைப்படுத்துவார்.[10]

அவர் மூலமாய் தேவனுடைய அன்பு என் உள்ளத்தில்
ஊற்றப்பட்டிருக்கிறது.[11]

ஆமென்.

[1] எபேசியர் 1: 13,14
[2] 1 கொரிந்தியர் 6:19
[3] யோவான் 14:16
[4] எபேசியர் 1:13ணு,14
[5] அப்போஸ்தலர் 1:8
[6] அப்போஸ்தலர் 4:31
[7] 2 கொரிந்தியர் 3:6 மற்றும் யோவான் 16:13,14
[8] ரோமர் 8:26, 27
[9] எபேசியர் 6:18
[10] யோவான் 16:14
[11] ரோமர் 5:5

எபேசியர் 1:13,14
நீங்களும் உங்கள் இரட்சிப்பின்
சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக்
கேட்டு, விசுவாசிகளானபோது,
வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட
பரிசுத்த ஆவியால் அவருக்குள்
முத்திரைபோடப்பட்டீர்கள்.
அவருக்குச் சொந்தமானவர்கள்
அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக
மீட்கப்படுவார்கள் என்பதற்கு
ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின்
அச்சாரமாயிருக்கிறார்.

1 கொரிந்தியர் 6:19
உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே
பெற்றும் உங்களில் தங்கியும்
இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய
ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும்
அறியீர்களா?

யோவான் 14:16
நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன்,
அப்பொழுது என்றென்றைக்கும்
உங்களுடனேகூட இருக்கும்படிக்குச்
சத்திய ஆவியாகிய வேறொரு
தேற்றரவாளனை அவர் உங்களுக்குத்
தந்தருளுவார்.

எபேசியர் 1:13 ஆ, 14
விசுவாசிகளானபோது,
வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட
பரிசுத்த ஆவியால் அவருக்குள்
முத்திரைபோடப்பட்டீர்கள்.
அவருக்குச் சொந்தமானவர்கள்
அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக
மீட்கப்படுவார்கள் என்பதற்கு
ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின்
அச்சாரமாயிருக்கிறார்.

அப்போஸ்தலர் 1:8
பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது
நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும்,
யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும்,
பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச்
சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

அப்போஸ்தலர் 4:31
அவர்கள் ஜெபம்பண்ணினபோது,
அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது.
அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால்
நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத்
தைரியமாய்ச் சொன்னார்கள்.

2 கொரிந்தியர் 3:6
புது உடன்படிக்கையின்
ஊழியக்காரராயிருக்கும்படி,
அவரே எங்களைத்
தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த
உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல்,
ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து
கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது.

யோவான் 16:13:14
சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல
சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;
அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம்
கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி,
வரப்போகிற காரியங்களை உங்களுக்கு
அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து
உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை
மகிமைப்படுத்துவார்.

ரோமர் 8:26,27
அந்தப்படியே ஆவியானவரும்
நமது பலவீனங்களில் நமக்கு
உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி
வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று
அறியாமலிருக்கிறபடியால்,
ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத
பெருமூச்சுகளோடு நமக்காக
வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர்
தேவனுடைய சித்தத்தின்படியே
பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்
செய்கிறபடியால், இருதயங்களை
ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை
இன்னதென்று அறிவார்.

எபேசியர் 6:18
எந்தச் சமயத்திலும் சகலவிதமான
வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்
ஆவியினாலே ஜெபம்பண்ணி,
அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும்
சகல பரிசுத்தவான்களுக்காகவும்
பண்ணும் வேண்டுதலோடும்
விழித்துக்கொண்டிருங்கள்.

யோவான் 16:14
அவர் என்னுடையதில் எடுத்து
உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை
மகிமைப்படுத்துவார்.

ரோமர் 5:5
மேலும் நமக்கு அருளப்பட்ட
பரிசுத்த ஆவியினாலே தேவ
அன்பு நம்முடைய இருதயங்களில்
ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த
நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

For more copies of this bookmark please contact a Derek Prince Ministries office below.

DPM-India (English)
admin@derekprince.in
derekprince.com/en-in

DPM-India (Tamil)
admin@derekprince.in
www.derekprince.com/ta

DPM-Asia/Pacific
enquiries@dpm.co.nz
www.derekprince.com/en-nz

DPM-Australia
enquiries@au.derekprince.com
www.derekprince.com.au